O.S.No.74/2018

**முதன்மை மாவட்ட நீதிமன்றம், புதுக்கோட்டை**

அ.வ.எண். 74/2018

பிரதிவாதி தரப்பு 1வது சாட்சி விசாலாட்சி என்பவரின் வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டத்தின்படி திருமதி. அனுராதா, கிரேடு-1 பெஞ்ச் க்ளார்க் என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி. விசாலாட்சி | வயது | : | 70/23 |
| கணவர் பெயர் | : | பார்த்தசாரதி | தாலுகா | : | சென்னை |
| கிராமம் | : | சென்னை | தொழில் | : | வீட்டுகுடித்தனம் |

நாள்-13.12.2023

பி.வா.சா.1

**முதல் விசாரணை தொடர்ச்சி**

1) 03.06.2015 தேதியிட்ட என்.கே.எல்.குழந்தைவேலன் செட்டியார், 2ம் பிரதிவாதி விசாலாட்சிக்கு எழுதி வைத்த பதிவு செய்யப்பட்ட உயில் சாசனம் அசல் பி.வா.சா.ஆ.1, (மேற்படி ஆவணம் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது)

2) 25.06.2015 தேதியிட்ட குழந்தைவேலன் செட்டியார், 7ம்பிரதிவாதி அபிராமி பெயரில் எழுதி கொடுத்த இனாம் செட்டில்மெண்ட் பத்திரத்தின் அசல் பி.வா.சா.ஆ.2,

3) 02.07.2015 தேதியிட்ட 7ம் பிரதிவாதி அபிராமி, 2ம் பிரதிவாதி விசாலாட்சிக்கு எழுதி கொடுத்த பதிவு செய்யப்பட்ட செட்டில்மெண்ட் பத்திரத்தின் அசல் பி.வா.சா.ஆ.3,

4) 26.09.2007 தேதியிட்ட குழந்தைவேலன் செட்டியார், மாதேஸ்வரன் மற்றும் சுமதி பெயரில் மாதாவரம் சொத்தின் ஒரு பகுதியை கிரையம் செய்து கொடுத்த கிரையப்பத்திரத்தின் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.4,

5) 25.03.2013 தேதியிட்ட குழந்தைவேலன் செட்டியார், வினோத்குமார் மற்றும் அவரது குடும்பத்தாருக்கு சென்னை, மாதவரம் சொத்தில் ஒரு பகுதியை எழுதி கொடுத்ததற்கான கிரையப்பத்திரத்தின் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ5,

6) 24.02.2017 தேதியிட்ட குழந்தைவேலன் செட்டியார், சுமதிமாதேஸ்வரனுக்கு மாதவரம் சொத்தின் ஒரு பகுதியை எழுதி கொடுத்ததற்காகன கிரையப்பத்திரத்தின் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ-6,

7) 21.01.1950 தேதியிட்ட பி.டி.செங்கல்வராய செட்டியார், பழனியப்ப செட்டியாருக்கும் மற்றும் குழந்தைவேலன் செட்டியாருக்கும் மின்ட் சொத்தை விடுதலை பத்திரம் மூலம் எழுதி கொடுத்த விடுதலை பத்திரத்தின் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.7,

8) 16.03.2015ல் குழந்தைவேலன் செட்டியார் பெயரில் துணை வட்டாட்சியர், கீழப்பனையூர் சொத்திற்கு வழங்கிய பட்டா பி.வா.சா.ஆ.8,

9) 15.06.2022 தேதியிட்ட சென்னை மின்ட் வீட்டிற்கு வருவாய் துறையில் வழங்கிய சிட்டா நகல் பி.வா.சா.ஆ.9,

10) 28.03.2017 தேதியிட்ட சிட்டா பி.வா.சா.ஆ.10,

பி.வா.சா.ஆ.2,3 மற்றும் 7 ஆகிய ஆவணங்களின் உண்மை தன்மை மற்றும் ஏற்புநிலை குறித்து வாதி தரப்பு வழக்கறிஞர் மற்றும் 5ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர்களின் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ஆவணங்கள் மற்றும் பி.வா.சா.ஆ.1 ஆகிய ஆவணங்களின் நம்பகத்தன்மை, ஏற்புத்தன்மை ஆகியவை குறித்து வழக்கின் தீர்ப்பில் உத்தரவு பிறப்பிக்கப்படும்.

**குறுக்கு விசாரணைக்காக வாய்தா வழங்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
புதுக்கோட்டை.